# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

**OS. No. 103/2015 நாள்.09.07.2025**

PW1- திரு. கல்யாணசுந்தரம், த /பெ. திரு. சோமசுந்தரம்

2ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை

வழக்கு எதற்காக தாக்கல் செய்துள்ளோம் என்றால் சொத்து பாகம் பிரிப்பதற்காக. 2ஆம் பிரதிவாதி மணிமொழி என்னுடைய மகன் என்ன கட்சி நடத்துகிறார் என்ன பரிகாரம் கோருகிறார் என்று தெரிந்து கொண்டேனா என்றால் சொத்து முழுவதும் அவர் பெயரில் கேட்கிறார். பாகபிரிவினை கேட்டு தாக்கல் செய்துள்ள சொத்து எவ்வளவு விஸ்தீர்ணம் எவ்வளவு என்றால் 2 ஏக்கர் 54 சென்ட். புல எண் 311/1 இல் 1 ஏக்கர் 17 சென்ட், 311/1பியில் 74 சென்ட், 311/2 இல் 50 சென்ட், 311/4 இல் 4 சென்ட். சொத்துக்கள் யாருக்கும் சொந்தம் என்றால் பூர்விக சொத்துக்கள். இந்த சொத்தை தவிர வேறு சொத்துக்கள் உள்ளதா என்றால் வீடு மற்றும் மனைகட்டு உள்ளது. அவற்றை வழக்கில் சேர்க்கவில்லை என்றால் ஆமாம். 2ஆம் பிரதிவாதி இன்னும் குடும்பசொத்துக்கள் நிறைய உள்ளது என்றும், அவை வழக்கில் சேர்க்கவில்லை என்றும் கட்சி செய்கிறார் என்றால் எனக்கு தெரிந்தவரை இல்லை. பட்டா எண் 159 புல எண் 131/2 எ5, 398/1 ஆகிய சொத்துக்கள் என்னுடையவை என்றால் ஆமாம். அது **பி.வா.சா.ஆ.**1 ஆகும். பட்டா பாஸ்புக் என்னிடம் இல்லை. புலவர்நத்தம் கிராமத்தில் புல எண் 1ஜி 1 சொத்து எனக்கு சொந்தமாக உள்ளது என்று சொன்னால் இல்லை. அந்த சொத்து எனக்கு சொந்தமானது என்றும் நீதிமன்றத்தில் பொய்யாக சொல்கிறேன் என்றால் இல்லை. குடும்பசொத்துக்கள் அனைத்தையும் இந்த வழக்கில் சேர்க்காததால் இந்த வழக்கு குறையுடையது என்றும் தள்ளுபடி செய்யவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

2ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது.

நான் சொல்ல என் உத்திரவுப்படி தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/- ப .நாகராஜன்)
2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.